**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 02-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.ஜி.அசோக் பிரசாத், பி.ஏ., பி.எல்., எம்.எஸ்.இ.என்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**(வாதி ஆஜர் . பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)**

அ.வ.எண்.488/2020

வா.சா.1 ஜெயந்தி

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. நான் 11ம் வகுப்புவரை படித்துள்ளேன். பத்திரங்கள் மற்ற ஆவணங்கள் அனைத்தும் என்னால் படிக்க இயலும். தாவா சொத்தானது கிரய வகையில் பாத்தியப்பட்டது. பூர்வீகமானது அல்ல. தாவா சொத்தானது 2 காலையில் பாத்தியப்பட்டதா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. கிரயம் கொடுப்பதற்கு முன்பு சண்முகம் என்பவருக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சண்முகத்திற்கு 2 பெண்குழந்தைகள், ஆண்வாரிசு கிடையாது. 1ம்பிரதிவாதி மைனாவதி மற்றொரு பெண் திலகவதி அவர் தற்போது உயிருடன் இல்லை. மைனாவதியை உள்ளூரில் ரேவதி என்று பட்டப்பெயரால் அழைக்கப்படுவார் என்பதை என்னுடைய பிராதில் சொல்லியுள்ளேன்.

2. தாவா சொத்து கிரயம் வாங்கும் போது விவசாய பூமியாக இருந்தது. அதில் கரும்பு பயிரிடப்பட்டிருந்தது. மைனாவதி, திலகவதி மற்றும் சண்முகம் ஆகியோர் நான் தாவா சொத்தை கிரயம் வாங்கும் முன்பே தனித்தனியாக பாகம் பிரித்திருந்தார்கள் என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கும் போது தாவா சொத்தில் கரும்பு பயிர்களை அறுவடை செய்துவிட்டு தான் தாவா சொத்தை கிரையம் கொடுத்தார்கள்.

3. கிரயத்தின்போது கரும்புகள் அறுவடை செய்துவிட்டார்கள். கிரயத்திற்கு முன்பு கிரய ஒப்பந்தம் செய்யவில்லை. டோக்கன் மூலமாக உடனடியாக தாவா சொத்தை கிரயம் செய்யப்பட்டது. தாவா சொத்தின் கிரய மதிப்பு ரூ.20,00,000/-க்குமேல் இருக்கும். தாவா

சொத்தில் கிரயம் வாங்கும் போது தென்னைமரங்கள் இருந்தது. அது பலனில் இருந்தது. தாவா பூமி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சரிவாக இருந்தது என்றால் தென்புறத்திலிருந்து வடபுறம் சரிவாக இருக்கும். ஆனால் மேல்புறத்திலிருந்து கிழபுறம் சரிவாக இல்லை.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**